ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்· 400) Aug (2) / 2023



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

‘ஸ்ரீ அஹோபில தாஸன்‘ க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

# உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் ..............................................................................................3

2. ஸங்கல்ப ஸூர்யோதயம் ..........................................................................5

3. அர்த்த பஞ்சகம்..........................................................................................6

4. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)...........................................................9

5. ஸ்தோத்ர ரத்னம் (பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)..........................15

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

# லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 220)

73. ப்ராணம் வருணம் ஆநந்தம் வ்யாபிநம் பிண்டயேத் புத:
வருணாய நம: பச்சாத் வாருண: அயம் மநூத்தம:

**பொருள்** – ப்ராணனைக் குறிக்கும் "ஹ", வருணனைக் குறிக்கும் "வ", ஆநந்தத்தைக் குறிக்கும் "ஆ", தொடர்ந்து புள்ளி, இதன் பின்னர் "வருணாய நம:" என்பதான மந்த்ரமானது மிகவும் உத்தமமான மந்த்ரமாகும் ("ஓம் ஹ்வாம் வருணாய நம:").

74. ப்ராணம் ஸூக்ஷ்மம் தத் ஆநந்தம் வ்யாபிநம் பிண்டயேத் புத:
வாயவே நம இதி ஏவம் வாயவீயோ மநூத்தம:

**பொருள்** – ப்ராணனைக் குறிக்கும் "ஹ", ஸூக்ஷ்மத்தைக் குறிக்கும் "ய", ஆநந்தத்தைக் குறிக்கும் "ஆ", தொடர்ந்து புள்ளி, இதன் பின்னர் "வாயவே நம:" என்பதான மந்த்ரமானது மிகவும் உத்தமமான மந்த்ரமாகும் ("ஓம் ஹ்யாம் வாயவே நம:").

75. கர்மாம்சு வருண ஆநந்தாந் வ்யாபிநா ஸஹ பிண்டயேத்
ஸோமாய நம இதி ஏவம் ஸௌம்யோ மநுருதாஹ்ருத:

**பொருள்** – கர்மத்தின் அம்சமான "த", வருணனைக் குறிக்கும் "வ", ஆநந்தத்தைக் குறிக்கும் "ஆ", தொடர்ந்து புள்ளி, இதன் பின்னர் "ஸோமாய நம:". குழந்தாய்! இவ்விதம் அமைந்துள்ள மந்த்ரமானது மனிதர்களால் கொண்டாடப்படத்தக்க மந்த்ரமாகும் ("ஓம் த்வாம் ஸோமாய நம:").

76. ஸூர்யம் ஊர்ஜம் ததா சக்ரிணம் பிண்டயேத் க்ரமாத்
ஈசாநாய நம: பச்சாத் ஈசாநஸ்ய மநூத்தமம்

**பொருள் –** ஸூர்யனைக் குறிக்கும் “ஹ”, மேற்பாகத்தைக் குறிக்கும் “உ”, சக்ரியைக் குறிக்கும் “ச”, தொடர்ந்து புள்ளி, இதன் பின்னர் “ஈசாநாய நம:” என்பதான மந்த்ரமானது மிகவும் உத்தமமான மந்த்ரமாகும் (“ஓம் ஹ்சூம் ஈசாநாய நம:”).

77. ப்ராணம் வைகுண்டம் ஆநந்தம் வ்யாபிநா பிண்டயேத் க்ரமாத்
அநந்தாய நம: பச்சாத் நாகராஜம் அநுஸ்த்வயம்

**பொருள் -** ப்ராணனைக் குறிக்கும் “ஹ”, வைகுண்டத்தைக் குறிக்கும் “ண”, ஆநந்தத்தைக் குறிக்கும் “ஆ”, தொடர்ந்து புள்ளி, இதன் பின்னர் “அநந்தாய நம:” என்பதான மந்த்ரமானது நாகராஜனுக்காக அமைந்துள்ள மிகவும் உத்தமமான மந்த்ரமாகும் (“ஓம் ஹ்ணாம் அநந்தாய நம:”).

78. ப்ராணம் கர்வம் தத் ஆநந்தம் வ்யாபிநா பிண்டயேத் க்ரமாத்
ப்ரஹ்மணே நம இதி ஏவம் ப்ரஹ்மணோ மநுத்தமம்

**பொருள் -** ப்ராணனைக் குறிக்கும் “ஹ”, கர்வத்தைக் குறிக்கும் “க”, ஆநந்தத்தைக் குறிக்கும் “ஆ”, தொடர்ந்து புள்ளி, இதன் பின்னர் “ப்ரஹ்மணே நம:” என்பதான மந்த்ரமானது ப்ரஹ்மத்தின் பொருட்டு அமைந்துள்ள மிகவும் உத்தமமான மந்த்ரமாகும் (“ஓம் ஹ்காம் ப்ரஹ்மணே நம:”).

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

## ஸங்கல்ப ஸூர்யோதயம்

(பகுதி – 86)

[சிஷ்யன்] தங்களுடைய கட்டளையை நான் தலையால் ஏற்றுக்கொண்டேன். இந்த விச்வத்திற்கே குருவாக உள்ள பகவானாகிய தங்கள், இந்த அற்பன் மீது இத்தனை பெரிய பாரத்தை ஏற்றுவது ஏன்?

[குரு] நான் கூறுவதைக் கேட்பாயாக.

114. நித்ய க்ஷிப்த பரஸ்பரேஷு ஸமயக்ராமேஷு நிஷ்ணாதிந:
சிஷ்யா: கேசந ஸந்தி ந: க்ஷிதிதலே சிக்ஷாதிக க்ராஹிண:
தத்ர த்வத் பூத நிர்பர ப்ரஸரயா புத்தயா பரிஷ்காரிண:
த்வத்த: ப்ரத்யயிதோ ந கச்சித் அபர: ப்ரத்யர்திபி: ப்ரார்த்தித:

**பொருள்** – [குரு கூறுதல்] நம்முடைய சிஷ்யர்களில் ஒரு சிலர், ஒன்றுக்கொன்று முரணாக உள்ள பலவிதமான ஸித்தாந்தங்களை நன்றாக அறிந்தவர்களாக உள்ளனர். நாம் உபதேசித்தவற்றைக் காட்டிலும் அதிகமாகவே தெரிந்தவர்களாக உள்ளனர். அவர்களில், மிகவும் அற்புதமாகவும், பூர்ணமாக அறியவல்ல புத்தியால் ஒளிர்பவனாக, நம்பிக்கைக்குப் பாத்திரமானவனாக, விரோதிகளாலும் ஏற்கப்படுபவனாக, உன்னைத் தவிர வேறு யாரும் இல்லை.

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்

…தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச் செய்த

# அர்த்த பஞ்சகம்

(பகுதி – 4)

**வ்யாக்யானம் –** உபாயங்களில் கர்ம யோகமாவது யஜ்ஞ, தாந, தபோ, த்யாந, ஸந்த்யாவந்தந, பஞ்சமஹாயஜ்ஜ, அக்நிஹோத்ர, தீர்த்த யாத்ரா, புண்ய க்ஷேத்ர வாஸ, க்ருச்ச்ர, சாந்த்ராயண, புண்ய நத ஸ்நாந, வ்ரத, சாதுர்மாஸ்ய, பலமூலாசந, சாஸ்த்ராப்யாஸ, ஸமாராதந, ஜப, தர்ப்பணாதி தர்மாநுஷ்டாநத்தால் வந்த காயசோஷணத்தாலே பாபநாஸம் பிறந்து, அத்தாலே இந்த்ரிய த்வாரா ப்ரஸரிக்கிற தர்மபூத ஜ்ஞாநத்துக்கு சப்தாதிகள் விஷயமல்லாமையாலே விஷய ஸாபேக்ஷை பிறந்து, யம நியம ஆஸந ப்ராணாயாம ப்ரத்யாஹார த்யாந தாரண ஸமாதி ரூபமான அஷ்டாங்க யோக க்ரமத்தாலே யோகாப்யாஸ காலத்தளவும் ஜ்ஞாநத்துக்கு ஆத்மாவை விஷயமாக்குகை. இதுதான் ஜ்ஞாந யோகத்துக்கு ஸஹகாரியுமாய், ஐச்வர்யத்துக்கு ப்ரதாந ஸாதநமுமாயிருக்கும்.

**விளக்கம் -** உபாயங்களில் கர்மயோகம் என்பது யஜ்ஞும், தானம், தவம், த்யானம், ஸந்த்யாஸந்தனம், பஞ்சமஹா யஜ்ஞும், அக்னிஹோத்ரம், தீர்த்த யாத்திரை, புண்ணிய க்ஷேத்ரத்தில் வசித்தல், சாதுர்மாஸ்யம், பலமூலாசநம், சாஸ்த்ர அப்யாஸம், ஸமாராதநம், ஜபம், தர்ப்பணம் போன்ற பலவிதமான தர்மங்களைச் செய்வதன் மூலம் சரீரத்திற்கு ஏற்பட்ட மெலிதல் என்பவற்றால் பாபங்கள் அனைத்தும் அழிந்து; இதன் விளைவாக இந்த்ரியங்களால் ஏற்படும் தர்ம பூதஞானம் என்பதற்கு சப்தம் போன்ற புலன் விஷயங்கள் இல்லாத காரணத்தால், புலன் விஷயங்கள் மீது ஆசை விலகி; யமம், நியமம், ஆஸநம், ப்ராணாயாம், ப்ரத்யாஹாரம், த்யாநம், தாரணை, ஸமாதி வடிவமாக உள்ள அஷ்டாங்க யோகத்தின் வரிசையால், யோக அப்யாஸம் ஏற்படும் காலம் முடிய ஞானத்திற்கு ஆத்மாவை விஷயமாக வைத்தல் ஆகும். இது ஞானயோகத்திற்குத் துணையாகவும், ஐச்வர்யத்திற்கு முதன்மையான ஸாதனமாகவும் உள்ளதாகும்.

**வ்யாக்யானம்** – ஜ்ஞாந யோகமாவது, இப்படி யோக ஜந்யமான ஜ்ஞாநத்துக்கு ஹ்ருதய கமலம், ஆதித்ய மண்ட லம் தொடக்கமான ஸ்தல விசேஷங்களில் எழுந்தருளியிருக்கிற ஸர்வேச்வரனை விஷயமாக்கி, அவ்விஷயந்தன்னை சங்க சக்ர கதாதரமாய், பீதாம்பர யுக்தமாய், கிரீடாதி நூபுராந்த திவ்யபூஷணாலங்க்ருதமாய், லக்ஷ்மீ ஸஹிதமாகவும் அநுபவித்து, யோகாப்யாஸ க்ரமத்தாலே அனுபவ காலத்தைப் பெருக்கி, அநவரத பாவநா ரூபமாக்குகை. இதுதான் பக்தியோகத்துக்கு ஸஹகாரியுமாய், கைவல்ய மோக்ஷத்துக்கும் ப்ரதாந ஸாதநமுமாய் இருக்கும்.

**விளக்கம்** - ஞான யோகம் என்பது என்ன? இவ்விதமாக கர்மயோகம் மூலம் பிறந்த ஞானத்திற்கு, இதயகமலம் மற்றும் ஆதித்யமண்டலம் என்பது தொடக்கமாக உள்ள பல சிறப்பான இடங்களில் எழுந்தருளியுள்ள ஸர்வேச்வரனை விஷயமாக்கி; அப்படிப்பட்ட ஸர்வேச்வரனை "சங்கு, சக்ரம், கதை" போன்றவற்றைத் தரித்தவனாக, பீதாம்பரம் அணிந்தவனாக, க்ரீடம் நூபுரம் முதலான திவ்ய பூஷண அலங்காரங்கள் கொண்டவனாக, லக்ஷ்மியுடன் சேர்ந்துள்ளவனாக அனுபவித்து; யோக அப்யாசம் மூலம் அப்படிப்பட்ட அனுபவ காலத்தை அதிகரித்து, எப்போதும் அதே பாவனையுடன் இருத்தல் ஆகும். இது பக்தியோகத்திற்குத் துணையாகவும், கைவல்ய மோக்ஷம் உண்டாவதற்கு முதன்மையான ஸாதநமாகவும் உள்ளதாகும்.

**வ்யாக்யானம்** – பக்தி யோகமாவது இப்படி தைலதாராவதவிச்சிந்ந ஸ்ம்ருதி ஸந்தாநரூபமான அநுபவம் ப்ரீதி ரூபாபந்நமாகையும், அது தன்னை அறியப் பார்த்தால் ப்ராரப்த கர்மங் கழிகையும், ஸாதந ஸாத்யங்களை அநுஸந்தித்து, அதனுடைய ஸங்கோச விகாஸமாம்படி பரிணமிப்பிக்கையும்.

**விளக்கம்** – பக்தி யோகம் என்பது என்ன? இவ்விதம் எண்ணெய் போன்று இடைவிடாமல் எண்ணும்படி உள்ளதான அனுபவம் என்பது ப்ரீதி வடிவமாக மாறுவதும்; அத்தகைய நிலையை அறிந்து ஆராயும்போது, பலன் தரத் தொடங்கி விட்ட கர்மங்கள் கழிதலும்; ஸாதனம் மற்றும் அதன் ரூபத்தை அடையவைக்கும்

இலக்கு ஆகியற்றை எண்ணி, அதனுடைய மலர்தல் மற்றும் சுருங்குதல் என்பதாக மாறும்படிச் செய்வதும் ஆகும்.

**வ்யாக்யானம் –** ப்ரபத்த்யுபாயமாவது, இப்படி கர்ம ஜ்ஞாந ஸஹ க்ருதையான பக்தியோகத்தில் அசக்தர்க்கும் அப்ராப்தர்க்கும் ஸுகரமுமாய், சீக்ர பல ப்ரதமுமாய், உபாயம் ஸக்ருத்தாகையாலே உபாயாநுஷ்டான ஸமநந்தரம் உண்டாகக் கடவதான பகவத் விஷயாபவங்களெல்லாம் ப்ராப்ய கோடிகடிதங்களாகையாலே ஸ்வரூபாநுரூபமா யிருக்கும்.

**விளக்கம் -** ப்ரத்தி உபாயம் என்பது என்ன? இவ்விதம் கர்மம் மற்றும் ஞானத்தின் மூலம் உதவி செய்யப்பட்டதான பக்தியோகத்தில் ஈடுபடும் சக்தி அற்றவர்கள், பக்தியோகம் கைகூடாமல் உள்ளவர்கள் முதலானவர்களுக்கு எளிதாக உள்ளதாகவும்; உடனடியாகப் பலன் அளிப்பதாகவும்; உபாயம் ஒரே தடவை மட்டுமே செய்யக் கூடியதாக உள்ளதால், அதே போன்று ஏற்படக்கூடிய பகவத் அனுபவங்கள் அனைத்தும் விரைந்து கிட்டுவதால், ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி உள்ளதாகும்.

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 365)

5-4-5 ஆரென்னை ஆராய்வார் அன்னையரும் தோழியரும்
நீர் என்னே என்னாதே நீளிரவும் துஞ்சுவரால்
காரன்ன மேனி நம் கண்ணனும் வாரானால்
பேர் என்னை மாயாதால் வல்வினையேன் பின்நின்றே

**பொருள்** - என் மீது கொண்ட பரிவு காரணமாக வந்து நிற்கும் தாய்மார்கள், என் மீது கொண்ட நட்பு காரணமாக வந்து நிற்கும் தோழிமார்கள் முதலான அனைவரும், “இவளுடைய தன்மை எப்படி உள்ளது” என்று ஆராயாமல், நீண்டதாக உள்ள இரவுப்பொழுது முழுவதும் நன்கு உறங்குகிறார்கள். அவர்கள் விழித்தபடி இருந்து என்னைக் குறித்து ஆராயாமல் உள்ளபோதிலும், ஆராயக் கடவனாக உள்ளவனும், நம்மிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவனும் ஆகிய க்ருஷ்ணனும் இங்கு வரவில்லை. இவ்விதம் யாரும் வராமல் உள்ளதற்கு ஈடான பாபங்களைச் செய்துள்ள நான் முடிந்து போன பின்னரும், நிற்கும் பெயரானது, என்னை முடிய விடாமல் செய்கிறது (அதாவது என்னைக் குறித்த பேச்சு இருந்தபடியே இருக்கும்). இவ்விதம் உள்ளபோது என்னைக் காப்பாற்ற யார் உள்ளனர்?

**அவதாரிகை –** ஆபத்தின் உதவும் அன்னையரும் தோழியரும் ஆராய்கிறிலர்கள். அவர்கள் உதவாதபோது உதவும் க்ருஷ்ணனும் வருகிறிலன். நான் சப்தாவசேஷையானேனென்கிறாள்.

**விளக்கம்** - "ஆபத்தில் உதவுகின்ற அன்னைமார்களும் தோழிமார்களும் கூட என்னைப் பொருட்படுத்தவில்லை. அவர்கள் உதவாமல் உள்ளபோது, க்ருஷ்ணனும் வந்து உதவவில்லை. நான் பெயரளவில் மட்டுமே நிற்பவள் என்பதாக உள்ளேன்", என்கிறாள்.

**வ்யாக்யானம்** - (ஆரென்னையாராய்வார்) "தாஸீநாம் ராவணஸ்யாஹம் மர்ஷயாமீஹ துர்பலா"; திருவடி சென்று ராக்ஷஸிகளை நலியப் புக; "இவர்கள் ராவணன் சோறுண்டு அவனுக்குப் பரதந்த்ரைகளாகையாலே என்னை நலிந்தார்களாகில் தங்களாலே வந்த தொன்றன்றாகில், அது தனக்கு நாமும் 'பொறுத்தோம்' என்று, தேர்த்தரவு கொடுத்த பின்பு, இனி இவற்றை நலிகிறதென்?" என்ன; "ராவணனும் பட்டானாகில் நம்மை நெடுநாள் நலிந்து போந்த இப்பெண் பயல்களை இப்போது பொறுக்க வேண்டுகிறதென்?" என்ன; (துர்பலா) "சிலர் நம்மை நலிந்தார்கள்" என்று நாம் அவர்களை நலியப்புக்கால், அப்போதே அவர்கள் கண்குழிவு காணமாட்டாதார் பின்பு செய்வதென் பொறாமல். ராவணனும் பட்டு, பெருமாளும் விஜயிகளான பின்பு, இனி இதொழிய வேறொரு தௌர்பல்யமில்லையிறே. தன்னை நலிந்த ராக்ஷஸிகளையும், "நீங்கள் அஞ்சாதே கொள்ளுங்கோள்" என்று "பவேயம் சரணம் ஹிவ:" என்னக் கடவ அவள், இப்போது, தன்னையாராய்வார் தேட்டமாய், "ஆரென்னையாராய்வார்" என்கிறாளிறே.

**விளக்கம்** - (ஆர் எனை ஆராய்வார்) - யுத்தகாண்டம் (16-40) - தாஸீநாம் ராவணஸ்யாஹம் மர்ஷயாமீஹ துர்பலா – பலம் குன்றியவளாக உள்ள நான், இங்குள்ள இராவணனுடைய தாஸிகள் செய்யும் குற்றங்களைப் பொறுத்துக் கொள்கிறேன் – என்பதைக் கூறுகிறார். அனுமன் சென்று ராக்ஷஸிகளை அழிக்க முற்பட்டபோது, அவனிடம் சீதை, "இவர்கள் அனைவரும் இராவணன் அளித்த சோற்றை உண்ட பின்னர், அவனுக்கு வசப்பட்டவர்களாக, அவன் சொற்படி என்னைத் துன்புறுத்துகிறார்கள். தாங்களாகவே இந்தச் செயலை இவர்கள் செய்யவில்லை. இவ்விதம் உள்ளபோது இவர்களிடம் நான் 'உங்களைப் பொறுத்துக்கொண்டேன்' என்று வாக்கு அளித்த பின்னர், இவர்களை ஏன் அழிக்கவேண்டும்?", என்று உரைத்தாள். இதற்கு அனுமன், "இவ்விதம் அழிதல் என்பது, இராவணனுக்கும் நிச்சயமாக ஏற்படப்போகிறது. இவ்விதம் உள்ளபோது, நம்மை நீண்ட நாட்களாக வருத்திய இந்தப் பெண்களை இப்போது ஏன்

பொறுத்துக் கொள்ளவேண்டும்?", என்று கேட்டான். இதற்கு சீதை, "ஒரு சிலர் நம்மைத் துன்புறுத்தினார்கள் என்பதற்காக, மீண்டும் நாம் அவர்களைத் துன்புறுத்த எண்ணினால் என்ன வேறுபாடு உள்ளது? அப்போது அவர்களுடைய "மற்றவர்கள் வசப்பட்ட தன்மை" என்ற எளிமையைக் கண்டு, பொறுப்பதைக் காட்டிலும் வேறு என்ன செய்வது? இராவணன் முடிந்த பின்னர், இராமனும் வெற்றி அடைந்த பின்னர், இவ்விதம் உள்ளதைத் தவிர இவர்களுக்கு ஆற்றல் குறைவு வேறு ஏதும் இல்லை அல்லவோ?" என்றாள். ஆகவே தன்னைத் துன்புறுத்திய ராக்ஷஸிகளிடம், "நீங்கள் அச்சம் கொள்ள வேண்டாம்; ஸுந்தரகாண்டம் (58-90) - பவேயம் சரணம் ஹிவ: - என்னைச் சரணம் புகுந்த உங்களை நான் காப்பாற்றுகிறேன் - என்று கூறினாள். இப்படிப்பட்ட நாயகியானவள் இப்போது, தன்னை ஆராய்பவர்கள் அரிதாக உள்ளதை எண்ணி, "ஆர் என்னை ஆராய்வார்", என்கிறாள் அல்லவோ?

**வ்யாக்யானம்** - (அன்னையரும் தோழியரும்) என் தசையைக் கண்டு என்னோடொக்க உறக்கந் துறந்தவர்களோடு, "உறக்கம் துறக்கக் கடவதன்று" என்று நிஷேதிக்குமவர்களோடு, வாசியற ஒக்கவெடுக்கும்படியாய் வந்து விழுந்தது. என் நினைவே நினைவாயிருக்குமவர்களோடு, தங்களுக்கென்ன ஒரு நினைவுண்டாய் நியமிக்கத்தக்கவர்களோடு வாசியற்றது. (அன்னையரும் தோழியரும் நீரென்னே யென்னாதே நீளிரவும் துஞ்சுவரால்) "துஞ்சுவரால்" என்னுமிது, "துஞ்சுதிரால்" என்னும் அர்த்தம் பெற்றுக் கிடக்கிறது என்று சொல்லுவாருமுண்டு. அன்னையரும் தோழியருமான நீங்கள், "என்னேயென்னாதே - என் பட்டாய் என்னாதே"யென்னுதல். அன்றிக்கே, அன்னையரும் தோழியரும், "நீரென்னேயென்னாதே – இதொரு நீர்மை இருக்கும்படியே! என்னே!" என்னாதே. அவன் தன்னைப் பொகட்டுப் போய் வேறு சிலவற்றாலே போதுபோக்கித் தன்னை நினையாதே இருக்கச்செய்தேயும், தான் அவனையொழியப் போதுபோக்கமாட்டாதே இருப்பதே! இதொரு நீர்மையே! "என்னே" இதென்ன ஆச்சர்யம். "என்னாதே – இப்படிச் சொல்லாதே". "நிறை நீர நீரவர் கேண்மை பிறைமதிப் பின்னீர பேதையார் நட்பு". (நீளிரவும் துஞ்சுவரால்) எனக்கு உறங்காமையே ஸ்வபாவமாம்படி, நெடிதான ராத்ரியெல்லாம் அவர்களுக்கு உறங்குகையே ஸ்வபாவமாய்விட்டது.

**விளக்கம்** - (அன்னையரும் தோழியரும்) - என்னுடைய இந்த நிலையைக் கண்டு, என்னைப் போன்றே தங்களுடைய உறக்கத்தைத் துறந்து சிலர் உள்ளனர். தங்களுடைய உறக்கமானது துறக்கக்கடவது அல்ல என்று சிலர் உள்ளனர். இவர்கள் இருவருக்கும் எந்த வேறுபாடும் அறிய இயலாதபடி இரவானது வந்து நின்றது. எனது நினைவுகளே தங்களுடைய நினைவாக உள்ளவர்கள் மற்றும் தங்களுக்கென்று நினைவு என்பதைக் கொண்டவர்கள் என்னும் வேறுபாடு அறியாதபடி இரவு வந்தது. (அன்னையரும் தோழியரும் நீரென்னே யென்னாதே நீளிரவும் துஞ்சுவரால்) - இங்குள்ள "துஞ்சுவரால்" என்பதை ஒரு சிலர் "துஞ்சுதிரால்" என்று பொருள் கொள்வர். அதாவது, அன்னையரும் தோழியார்களும் ஆகிய இவர்கள், எனது நிலையைக் கண்டு, "நீ என்ன பாடுபடுகிறாயோ" என்று கூறாமல் உள்ளனர். அல்லது அவர்கள், "உனது நீர்மை உள்ள தன்மைதான் என்னே" என்று கேட்காமல் உள்ளனர். அவன் என்னை விட்டு அகன்று சென்றாலும், வேறு சிலவற்றின் மூலம் தனது பொழுதைப் போக்கிக் கொள்கிறான்; என்னை நினைப்பதில்லை; ஆயினும் நான் அவனை விட்டு அகன்று சென்று எனது நினைவைப் போக்காமல் உள்ளேன். இது என்ன ஒரு நீர்மை! இது என்ன ஒரு ஆச்சர்யம்! இவ்விதமாக இவர்கள் எண்ணாமல் உள்ளனரே! திருக்குறள் (782) - நிறை நீர நீரவர் கேண்மை பிறைமதிப் பின்னீர பேதையார் நட்பு - என்பது காண்க. (நீள் இரவும் துஞ்சுவரால்) - இரவுப்பொழுதில் உறங்காமல் இருத்தல் என்பது எனக்கு இயல்பாகி விட்டது போன்று, நீண்ட இரவுப்பொழுது முழுவதும் உறங்கியபடி இருத்தல் என்பது அவர்களுக்கு இயல்பாகிவிட்டது.

**வ்யாக்யானம்** - (காரன்ன மேனி) ஒரு நீர்ச்சாவியிலே ஒருபாட்டம் வர்ஷித்தாற்போலே குளிரும்படியான வடிவையுடையவனுமாய், "தாஸாமாவிரபூத்" என்கிறபடியே முன்பு உதவிப் போந்தவனும் வருகிறிலன். "தாஸாம்" என்கிறது அவர்கள் பூர்வாவஸ்த்தையைப் பற்றவிறே. (பேரென்னை மாயாதால்) அவனோடு ஒவ்வாநின்றதீ! பேரும். அவன் வருகிறிலன், இது போகிறதில்லை. நான் கார்யத்திலே முடிந்தேனாயிருக்கச் செய்தேயும் "இன்னாள், இன்னாள்" என்கிற இப்பேர் என்னை முடிந்தேனாகவொட்டுகிறதில்லை. ஆழ்வாருடைய திருநாமம் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸத்தா ஹேதுவானப்போலே இவர் தமக்கும் ஸத்தா ஹேதுவானபடி. ஸர்வர்க்கும் தாரகமாயிருக்குமே. இதினுடைய

அடியுடைமையிறே எல்லாரும் சிரஸா வஹிக்கிறது. (பேரென்னை மாயாதால்) சப்தாவசேஷையானேன் என்றபடி.

**விளக்கம்** - (கார் அன்ன மேனி) - நீர் இல்லாத காரணத்தால் உண்டாகும் சாவி என்ற பயிர் மீது ஒரு கனமழை பெய்தது போன்று குளிரும்படியான வடிவம் கொண்டவன். ஸ்ரீமத்பாகவதம் (10-32) – தாஸாம் ஆவிரபூத் - கோபிகைகளுக்கு நடுவில் வந்து புலப்பட்டான் - என்பதற்கு ஏற்ப, முன்பு கோபிகைகளுக்கு உதவியவன், இன்று வரவில்லை. அவர்களுக்கு முன்பு ஏற்பட்ட நிலையால் அல்லவோ அன்று வந்தான்? (தாஸாம்) - பெண்களுக்கு மிகவும் உதவும் க்ருஷ்ணன் இப்போது வரவில்லை. (பேரென்னை மாயாதால்) - எனது பெயரான நீயும் அவனைப் போன்றே உள்ளாய். எப்படி? அவன் வருவதில்லை, இந்தப் பெயரும் அகல்வதில்லை. நான் முடிந்தாலும், “இன்னாள், இன்னாள்” என்று என்னை அடையாளம் காண்பிக்கக்கூடிய பெயர் போகவில்லை. ஆழ்வாடைய திருநாமம் என்பது அனைத்து ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் வாழ்வாக உள்ளதைப் போன்று, இவருக்கும் இவருடைய பெயரே, இவருடைய இருப்புக்குக் காரணமாக உள்ளது. அதாவது சடகோபன் என்பது திருப்பாதங்களில் பெயராக உள்ளதால் அனைவருக்கும் உயிர் தாங்கக் காரணமாக உள்ளது. இதனை அல்லவோ எல்லோரும் தங்கள் தலையில் தாங்கி ஏற்கிறார்கள்? (பேரென்னை மாயாதால்) - பெயரளவில் மட்டுமே நான் உள்னேன்.

**வ்யாக்யானம்** - (வல்வினையேன்) நான் முடியச்செய்தேயும் என்னை முடிந்தேனாகாதபடி பண்ணும்படியான பேரைப் படைக்கும்படியான மஹாபாபத்தைப் பண்ணினேன். (பின்னின்று) நான் முடியச் செய்தேயும் இப்பேரானது எனக்குப் பின்னும் நின்று முடிந்தேனாக வொட்டுகிறதில்லை. வருகிறபோது ஒக்கவந்தால், போகிறபோதும் ஒக்கப் போகவேண்டாவோ? "நாம ரூபே வ்யாகரவாணி”, “நாமரூபஞ்ச பூதாநாம்" என்று ஒக்கச் சொல்லக்கடவதிறே. முற்பட வந்தார்க்கு முற்படப் போகவேண்டியிருக்க, பிற்படவும் போகலாகாதோ?

**விளக்கம்** - (வல்வினையேன்) – நான் முடிந்து போக முயன்றாலும், இந்தப் பெயரானது முன்பும் பின்பும் நின்று, என்னை “முடிந்தாள்” எனது கூறச் செய்யாமல் நிலைக்கிறது. இப்படிப்பட்ட பெரிய பாபத்தைச் செய்தேன். (பின் நின்று) - முன்பும் பின்பும் வருகிறபோது, உடன் வருகின்ற பெயரானது, செல்லும்போது கூடவே வரவேண்டுமா? சாந். (6-3) – நாம ரூப வ்யாகரவாணி -

பெயர் உருவங்களை உண்டாக்கக் கடவேன் - என்றும், ஸ்ரீவிபு. (1-5-63) – நாம ரூபம் ச பூதாநம் – பெயர் உருவம் கொண்ட உயிர்கள் - என்றும் கூறுவதற்கு ஏற்ப பெயரையும் உருவத்தையும் ஒன்றாகவே கொள்ளவேண்டும் அல்லவோ? முதலில் வந்தவர்களுக்கு முதலில் போகவேண்டும் என்ற விதிமுறை உள்ளபோது, பின்னராவது போகலாதா?

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:
ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி ஆளவந்தார் அருளிச் செய்த

# ஸ்தோத்ர ரத்னம்

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை
அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 79)

**வ்யாக்யானம் -** (விலாஸேத்யாதி) லீலையாக ஆக்ரமிக்கப்பட்ட உத்க்ருஷ்டரான தேவதைகளுடைய இருப்புகளையும், மரண தர்மாக்களான மனுஷ்யாதிகளுடைய இருப்புகளையும் உடைத்தாயுள்ளத்தை. விமுகருடைய தலையிலே அநாயாஸேந சென்றிருந்த திருவடிகளுக்கு, ருசியையுடையார் தலையிலே இருக்கை பணியுண்டோ? (விக்ராந்த) அந்ய பரரானார் பக்கலிலேயோ மேல்விழலாவது? அநந்ய ப்ரயோஜனர் பக்கலிலே மேல்விழலாகாதோ? (பர அவர ஆலயம்) வஸிஷ்ட சண்டாள விபாகமின்றிக்கே தூளிதானம் பண்ணின திருவடிகள் அத்தையொழியச்செல்லாத எனக்கு அரிதாவதே! “ஸங்கைஸ் ஸுராணாம்” என்கிற கர்மபவாநிஷ்டரும், “தவஞ் செய்து நான்முகனே பெற்றான்” என்கிறபடியே உபய பாவநா நிஷ்டரும் பெற்ற பேறு எனக்கு அரிதாவதே!

**விளக்கம் -** (விலாஸேத்யாதி) - லீலைக்காகவே ஆக்ரமிக்கப்பட்டதான, உயர்ந்த தேவர்களுடைய இருப்பிடங்கள் மற்றும் பிறப்பு இறப்பு என்பதையே தர்மமாகக் கொண்ட மனிதர்களின் இருப்பிடங்கள் ஆகியவற்றைக் கொண்டதாக உள்ள திருவடிகள். தன்னை விரும்பாதவர்களுடைய தலைகளில் கூட எளிதாகச் சென்று அமர்ந்த திருவடிகளுக்கு, தன்னை விரும்புபவர்களிடம் சென்று அவர்கள் தலைகளில் அமர்தல் என்பது கடினமான செயலோ? (விக்ராந்த) - மற்ற பலன்களைவிரும்பியபடி உள்ளவர்களிடம் சென்று விழுவதா? வேறு பயன் விரும்பாதவர்களிடம் சென்று நிற்கலாகாதோ? (பர அவர ஆலயம்) - வசிஷ்டர் மற்றும் சண்டாளன் என்னும் வேறுபாடு ஆராயாமல், அனைவருடைய

தலைகளிலும் தனது துகள்களைத் தானமாக அளித்த திருவடிகள். அதனை விடுத்து வேறு ஒன்றைப் பற்றாமல் உள்ள எனக்கு, அந்தத் திருவடிகள் கிட்டுவது ஏன் அரிதாகிறது? மாங்கல்யஸ்தவம் – ஸங்கைஸ் ஸுராணாம் - ஸ்வர்கத்தில் உள்ள தேவர்கள் - என்பதற்கு ஏற்ப கர்மங்களைப் பாவனையாகக் கொண்ட நிஷ்டர்கள், இரண்டாம் திருவந்தாதி - (78) - தவஞ் செய்து நான்முகனே பெற்றான் - என்பதற்கு ஏற்ப உபய பாவனை நிஷ்டர்கள் என்பதாக உள்ளவர்கள் அடைந்த பேறு எனக்கு ஏன் அரிதாகிறது?

ஸ்வாமி ஆளவந்தார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்